## சாண மூலிகை உரம்

சாண மூலிகை உரம் என்பது ஆங்கிலத்தில் CPP என்றும் பேரல் கம்போஸ்ட் (Barrel Compost) என்றும் அழைக்கப்படுகிறது. CPP உரம் செடி வளர்ச்சி, விதை நேர்த்தி மற்றும் நிலவள மேம்பாடு என பல வகையில் பயன்படுகிறது. இவ்வுரத்தை இந்தியா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளில் பையோடைனமிக் (உயிர்சக்தி வேளாண்மை) விவசாயிகள் தயாரித்துப் பயன்பெற்று வருகிறார்கள். இது பையோடைனமிக் விவசாய மூலிகை உரங்களான BD 502-507 வரையிலான உரங்களை ஒருங்கிணைத்து பசுஞ்சாணத்தில் சேர்த்து ஊட்டமேற்றி (மட்க வைத்து) பிறகு உபயோகிக்கும் சிறந்த முறையாகும். இச்சாண மூலிகை உரம் ஜெர்மனி நாட்டு விவசாயப் பெண்மணியான மரியாதுன் என்பவரால் முதன்முதலில் தயாரிக்கப்பட்டது.

### தயாரிக்கத் தேவையான பொருட்கள் :

1) பசுஞ்சாணம் – 90 கிலோ அல்லது 6 வாளி அளவு
2) ராக் ஃபாஸ்ஃபேட் (அல்லது) பசால்ட் – 300 கிராம்
3) முட்டை ஓட்டுத் தூள் – 300 கிராம்
4) BD 502 - 507 மூலிகை உரங்கள் – 3 செட்

### தயாரிக்கத் தேவையான இடம் மற்றும் கட்டமைப்பு :

நிலத்தில் 3 x 2 x 1 அடி (நீளம், அகலம், ஆழம் – உட் கூடு) என்ற அளவில் செங்கல்லால் கட்டிய ஒரு தொட்டி.

### உரம் தயாரிக்கும் முறை :

குழியில் நன்றாகத் தண்ணீர் தெளித்து, மேற்கூறிய அளவுள்ள 90 கிலோ சாணம், 300 கிராம் முட்டை ஓட்டுத் தூள், 300 கிராம் ராக் ஃபாஸ்ஃபேட் ஆகியவற்றை நன்றாகப் பிசைந்து அக்கலவையை குழியில் போட்டு மட்டமாக தட்டிவிடவும்.

பிறகு குச்சியால் சாணத்தில் 5 குழி ஊன்றி எண் 502 முதல் 506 வரை உள்ள மூலிகை உரத்தை குழிக்கு 3 கிராம் என போட்டு ஒவ்வொரு குழியிலும் நாம் தயாரித்து வைத்துள்ள 507 மூலிகை திரவ கரைசலை ஊற்றி மூடவும். 507 கரைசல் மீதம் இருந்தால் அதைக் குழியில் தெளிக்கவும்.

சாக்கை தண்ணீரில் நனைத்து குழியை மூடிவிடவும். குழியின் மேல் வெயில் படாதபடி பந்தல் அமைக்கவும்.

3 வாரங்கள் கழித்து சாணக்கலவையை நன்றாக காற்று புகும்படி மேல் கீழாக கிளறி விடவும். பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறை என 2 தடவை கிளறி விடவும்.

சுமார் 3 முதல் 4 மாதங்கள் கழித்து குழியில் உள்ள உரத்தைப் பயன்படுத்தலாம். உரத்தை மண் சட்டியில் போட்டு நனைந்த சாக்கால் மூடி இருட்டான இடத்தில் வைத்து பாதுகாத்தால் உரத்தின் தரம் குறையாது.

**குறிப்பு :**

**1) சாணம் :** இயற்கையான புல் மற்றும் தீவனம் கொடுத்து பால்கறக்கும் பசுவின் சாணமாக இருத்தல் வேண்டும். சாணம் எடுப்பதற்கு 3 நாட்களுக்கு முன் பசுவிற்குத் தடுப்பூசியோ மற்ற மருந்துகளோ கொடுத்திருக்கக் கூடாது.

2) 507 என்ற திரவ மூலிகை உரத்தை 30 மில்லி எடுத்து 3 லிட்டர் தண்ணீரில் ஊற்றி வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் நீரில் சுழி ஏற்படும்படி நன்றாக கலந்து கரைசல் உருவாக்க வேண்டும்.

3) குழி எடுக்குமிடத்தில் மரங்களோ அல்லது செடி, புதர்களோ இல்லாமல் இருந்தால் நல்லது.

**பயன்படுத்தும் முறைகள் :**

**1) விதை நேர்த்தி :** 100 கிராம் சாண மூலிகையில் தேவையான அளவு நீரைக் கலந்து கட்டியாக கூழ் தயாரித்து அதில் விதையைப் போட்டு பிசைந்து விதை நேர்த்தி செய்தால் விதைகள் பழுதின்றி முளைப்பதோடு விதை மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்தலாம்.

**2) நில வழி ஊட்டம் :** 15 லிட்டர் சுத்தமான தண்ணீரில் 500 கிராம் சாண மூலிகை உரத்தைப் கலந்து முதலில் இடது புறமாகவும் பிறகு வலது புறமாகவும் 20 நிமிடம் தண்ணீரில் சுழி தோன்றும் அளவுக்கு வேகமாக கலக்கி கரைசல் தயாரித்துக் கொள்ளவும். பூமியில் ஈரப்பதம் உள்ள கீழ்நோக்கு நாட்களில் மாலை நேரத்தில் நிலத்தில் தெளித்தால் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் மற்றும் மண்புழுக்கள் அதிகமாகி நல்ல பலன் கிடைக்கும்.

**3) இலைவழி ஊட்டம் :** 1 கிலோ சாண மூலிகை உரத்தை 30 லிட்டர் சுத்தமான தண்ணீரில் போட்டு முதலில் இடது புறமாகவும் பிறகு வலது புறமாகவும் 20 நிமிடம் தண்ணீரில் சுழி தோன்றும் அளவுக்கு வேகமாக கலக்கி கரைசல் தயாரித்துக் கொள்ளவும். மேல் நோக்கு நாட்களில் இக்கரைசலை பயிர்களின் இலைகளின் மீது தெளித்தால் இது வளர்ச்சி ஊக்கியாக செயல்பட்டு பயிர்கள் செழிப்பாக வளரும்.

**4) மரப்பூச்சு :** இவ்வுரத்தினைத் தண்ணீரில் கலந்து கூழாக்கி மரத்தின் மீதும் கிளைகளின் மீதும் காயம் பட்ட இடங்களிலும் பூசினால் காயம் ஆறுவதோடு பூஞ்சான் தொற்றும் வராது. தண்டு துளைப்பான் போன்ற புழுக்கள் வராமல் தடுக்கும்.